16 ஆண்டுகளுக்குப் பின்

# மன்னார் வளைகுடா தீவுகளில் பவளப்பாறை கண்காணிப்புப் பணி தொடக்கம்

**ராமேசுவரம், அக். 17:** ராமநாதபுரம் மாவட்டம், மன்னார் வளைகுடா தீவுப்பகுதியில் 16 ஆண்டுகளுக்குப் பின், பவளப்பாறைகள் கண்காணிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் செவ்வாய்க்கிழமை தொடங்கின.

மன்னார் வளைகுடா பகுதியில் பாம்பன் முதல் தூத்துக்குடி வரையில் 21 தீவுகள் உள்ளன. இப்பகுதியில் கடந்த 2000–02 ஆம் ஆண்டு மத்திய கடல்வள ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் உள்ள பவளப்பாறைகளை பற்றிய விவரங்களை ஜி.பி.எஸ் கருவி மூலம் கண்டறிந்தனர்.





மன்னார் வளைகுடா தீவுப்பகுதியில் நன்கு வளர்ந்த பவளப்பாறை. (வலது) முயல் தீவுப்பகுதியில் செயற்கையாக பவளப்பாறைகளை உருவாக்க ஆய்வு செய்யும் வனத்துறையினர்.

16 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் உள்ள பவளப்பாறைகள் ஆய்வுப் பணியை, ஆய்வாளர்கள் மற்றும் வனத்துறையினர் செவ்வாய்க்கிழமை தொடங்கினர்.

முதல் கட்டமாக முயல் தீவுப் பகுதியில் ஏற்கெனவே உள்ள புள்ளிவிவரம் அடிப்படையில் ஜி.பி.எஸ் கருவி மூலம் ஆய்வு செய்தனர். இதில் 50 முதல் 70 சதவீதம் வரையில் பவளப்பாறைகள் வளர்ச்சி அடைந்துள்ளது தெரியவந்தது.

பவளப்பாறைகள் இல்லாத இடங்களில் சிமென்ட் பலகைகளில் பவளப்பாறைகளை கடலுக்கு அடியில் வைத்து செயற்கையாக பவளப்பாறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுப் பணியில் டாக்டர் சண்முகராஜ், வன உயிரின காப்பாளர் து.கோ.அசோக்குமார், உதவி வனக் காப்பாளர் ராஜ்குமார், மண்டபம் உயிரின சரக அலுவலர் சதீஷ் மற்றும் வனச்சரக அலுவலர் சுதிரேசன் மற்றும் வனத்துறையினர் கலந்து கொண்டனர்.